# மனப்பால்....

கா. பொ. இரத்தினம், பா.உ.

தேசிய அரசுப் பேரவையில்

5-7-72 இல்

நிகழ்த்திய உரை

சன்மார்க்க இளைஞர் சங்கம் வெளியீடு

தமிழர்களை அடிமைகளாக்கலாம் என்று

குடிக்கவேண்டாம்

# மனப்பால்

இன்று இந்தத் தேசிய அரசுப் பேரவையிலே கௌரவ முதலமைச்சரவர்களின் கொள்கை விளக்க அறிக்கை விவாதத்திலே, இந்நாட்டுத் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்ற முறையிலே எங்களுடைய கடமை மிகப் பொறுப்பு வாய்ந்ததாகவும் முக்கியமானதாகவும் இருக்கிறது. இந்நாட்டு வரலாற்றிலே திருப்ப மையத்துக்கு நாம் இன்று வந்துவிட்டோம். சரித்திரம் மீண்டும் திரும்பி நடைபோடப் போகிறதா? என்ற கேள்வி இப்பொழுது எழுந்துள்ளது.

இந்நாட்டிலே ஈராயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்ந்து வாழ்ந்து வரும் இரண்டு இனங்கள் ஒன்றுபட்டு வாழப் போகின்றனவா? முட்டி, மோதிப் பிரிந்து வாழப்போகின்றனவா? என்ற கேள்விதான் இப்பொழுது தமிழ் மக்களின் உள்ளங்களில் எழுந்திருக்கின்ற கேள்வியாக இருக்கிறது

## தமிழினமும் தரணி ஆண்ட இனம்.

தமிழர்கள் சிங்கள மக்களில் மூன்றிலொரு பகுதியாக இருக்கிறார்கள்; சிறுபான்மையினமாக இருக்கிறார்கள். எனினும், சென்ற 2,500 ஆண்டுகாலமாக—சரித்திரம் தொடங்கிய காலந்தொடக்கம்-இந்நாட்டிலே தொடர்ந்து வாழ்ந்து வருகின்ற இரு பேரினங்களிலே தமிழர்களும் ஒரு பேரினம் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

சிங்கள மக்கள் எப்படி இந்த நாட்டை ஆண்டார்களோ அதனைப்போல இந்நாட்டை ஆண்ட பெருமை தமிழர்களுக்கும் உரியது.

சிங்கள மக்களுக்கு எப்படிச் சிங்கள மொழி தாய்மொழியாக இருக்கிறதோ, அதனைப்போல் தமிழ்மக்களுக்குத் தமிழ் தாய்மொழியாக இருக்கின்றது.

சிங்கள மக்கள் எப்படி இந்தநாட்டில் தமிழர்களையும் ஆண்டார்களோ, அதைப்போலத் தமிழர்களும் இந்தநாட்டில் சிங்கள மக்களையும் ஆண்டிருக்கிறார்கள்.

சிங்கள மக்கள் எப்படிச் சிங்கள இராச்சியங்களை வைத்திருந்தார்களோ, அதைப்போலத் தமிழர்களும் இந்நாட்டிலே தமிழ் இராச்சியங்களை நடத்தி இருக்கிறார்கள்.

சிங்கள மக்களுக்கு எப்படி ஒரு சொந்த மதமாக—பெரும்பான்மையினரின் மதமாக—பௌத்த மதம் இருக்கிறதோ, அதைப்போலத் தமிழர்களுக்கும் சைவமதம் இருக்கின்றது.

சிங்கள மக்களுக்கு எப்படி ஒரு பிரதேசம் இருக்கிறதோ, அதைப்போலத் தமிழர்களுக்கும் இந்நாட்டிலே ஒரு பிரதேசம் இருக்கிறது.

இந்த வரலாற்று உண்மைகளை மறைத்துக்கொண்டும் மறந்துவிட்டும் தமிழர்கள் சிறுபான்மையினராக இருக்கின்றபடியால் அவர்களை ஒதுக்கித் தள்ளிவிடலாம்—அவர்களைப் புறக்கணித்து விடலாம்—இரண்டாந்தரப் பிரசைகளாக்கிவிடலாம் — அடிமைகளாக்கிவிடலாம் என்று மனப்பால் குடிக்கவேண்டாம்.

## தாயைக் கொல்வதைத் தடுப்பது துரோகமா!

இன்று இங்கேயுள்ள ஒவ்வொரு உறுப்பினரையும் பார்த்துக் கேட்கிறேன்: ஒருவருடைய தாயின் காலிலே—

கையிலே விலங்கிட்டு, கண்ணை—காதை—வாயை எல்லாம் மூடிக்கட்டி, தூக்குக் கயிற்றை மாட்டி அவரைக் கொல்லு கின்ற நேரத்திலே அத்தாயின் நல்ல மக்கள் என்ன செய் யவேண்டும்? அத்தாயினுடைய உயிரைக் காப்பாற்ற வேண் டுமன்றோ!

இன்று எங்களுடைய நிலையிலேயிருந்து உணருமாறு உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். எங்களுடைய அரிய பெரிய தாயாக இருக்கின்ற தமிழ்மொழியினுடைய கால், கை எல்லாம் விலங்கிடப்பட்டு வாய் முதலியனவெல்லாம் கட்டப்பட்டுத் தூக்குக் கயிறு அத்தாயின் கழுத்தில் போடப் பட்டிருக்கின்றது. ஆகவே அந்தத் தாய் மொழியாம் தமிழ் மொழியை இந்த நாட்டிலே கொல்ல வேண்டாம் என்று அத்தாயின் மக்களாகிய தமிழர்கள் இன்று கொ தித்து எழும்பிக் கேட்கிறார்கள். ‘‘தாயைக் கொல்லாதீர் கள்; வாழ விடுங்கள்’’ என்று கேட்பது அநியாயமா? வகுப்புவாதமா? சமதர்மத்துக்கு மாறானதா? நீதிக்குமாறு னதா? என்று நாம் கேட்கிறோம்.

## ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்

எனக்கு முன் பேசிய கௌரவ நியமனப் பிரதிநிதி அவர் கள்—தோட்டத் தொழிலாளர்களுக்காக நியமனம் செய்யப் பட்ட பிரதிநிதி அவர்கள்—நாங்கள் எப்பொழுதும் ஐக்கிய தேசியக் கட்சியைத்தான் ஆதரிக்கிறவர்களாக இருக்கிறோம்; முற்போக்குள்ள கட்சிகளை ஆதரிக்கவில்லையென்று கேட் டார். ஆனால், அவர் அண்மையிலேதான் பாராளுமன் றத்துக்கு வந்தவர். எங்களுக்கும் சிறீலங்கா சுதந்திரக் கட் சிக்கும் உள்ள தொடர்பு அவருக்குத் தெரியாது என்று தான் நான் நினைக்கின்றேன்.

1960 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி எங்களுடன் தொடர்புகொள்ள முயன்றபொழுது நாங்கள் மறுத்தோம். அதனால் அவர்களுடைய அரசாங்கம் விழுந்தது. அப்பொ

பூது சிறீலங்கா சுதந்திரக் கட்சியுடன் நாங்கள் சில தொடர்புகளை வைத்திருந்தோம். இதனால் ஐக்கியதேசியக் கட்சி எங்களுக்கும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியினருக்கும் தொடர்புகளும் உடன்படிக்கைகளும் இருக்கின்றனவென்று பிரசாரம் செய்தது. நாங்கள் எழுத்திலே வைக்கவில்லை. **1960** ஆம் ஆண்டு யூலை மாதம் ஆட்சிக்கு வந்தவுடன் சிறீலங்கா சுதந்திரக்கட்சி எங்களுக்குத் தருவதாகச் சொன்ன-தரவேண்டிய-உரிமைகளை மறுத்தது. அதனுலேதான் **1965** ஆம் ஆண்டு சிறீலங்கா சுதந்திரக்கட்சியுடன் சேர மறுத்தோம்.

இந்த இரண்டு கட்சிகளும் ஒரே குட்டையிலே ஊறிய மட்டைகள். இந்த இரண்டு கட்சிகளும் எங்களை அடிமையாக்கும் தொழிலிலே-எங்கள் மொழி உரிமையைப் பறிக்கும் வேலையிலே-ஈடுபட்டிருக்கும் கட்சிகள். ஐக்கியதேசியக் கட்சியுடன் நாம் சேர்ந்தது, இந்நாட்டின் ஒற்றுமைக்காகவும், எங்கள் மொழி உரிமையைப் பெறுவதற்காகவும், எங்கள் பகுதியிலுள்ள மக்கள் தங்களைத் தாங்களே ஆளும் மாவட்ட சபைகளைப் பெறுவதற்காகவுமே. ஆனுல், அந்தக் கட்சியும் எங்களுக்கு நன்மை செய்யாதபடியால் நாம் இடையிலே பிரிந்தோம். இன்னும் நாம் விலகியதற்குச் சிறப்பான காரணம், அவர்கள் தாங்களாகவே கொண்டுவந்த தமிழ் மொழிப் பிரமாணங்களை நாம் விரும்பிய அளவுக்கு-இந்நாட்டிலே தமிழரும் தங்கள் மொழி உரிமை பெற்றுச் சமமாக வாழத்தக்க அளவுக்கு—நடைமுறைப்படுத்த முயலாமையே ஆகும். இந்த உண்மையை எவரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

### கடைசி மூச்சுவரை போராடுவோம்

இச் சூழ்நிலையில், தாயின் கழுத்தில் தூக்குக்கயிறு சுருக்கிடப்படும் வேளையில் அதனைத் தடுக்க முயன்று பார்த்தோம்; அணைத்துக் கேட்டுப்பார்த்தோம்; ஆட்சியிலே ஏற்றி வைத்துக் கேட்டுப் பார்த்தோம் ஆனல், எந்த விதமான நன்மையும் ஏற்படவில்லை. மீண்டும் மீண்டும்

உதைக்கும் காலை முத்தமிடும் உன்மத்தர்களாக இருக்க நாம் விரும்பவில்லை. எங்களுக்கு உள்ளவை மூன்றே மூன்று வழிகள் உணர்ச்சியுள்ள—தன்மானமுள்ள—ஒரு மனிதன் என்ற முறையிலும், ஓரினத்தின் பிரதிநிதி என்ற முறையிலும் சொல்கின்றேன். உரிமை தராவிட்டாலும் ஒத்துழைப்பது; உரிமைக்காகப் போராடுவது; சரணாகதி அடைவது. இந்த மூன்றையும் தவிர வேறு வழி எதுவுமில்லை. ஒத்துழைத்துப் பார்த்தோம்; கிடைக்கவில்லை. சரணாகதி அடைவதை எந்த வகையிலும் நாம் விரும்பவில்லை. ஆகவே, கடைசி மூச்சு இருக்கும் வரை—கடைசித் தமிழன் இந்நாட்டிலே இருக்கும் வரை—எமது உரிமைக்காகப் போராட வேண்டிய நிலைக்கு வந்து விட்டோம்.

எனக்குமுன்னர் பேசிய கௌரவ சாவகச்சேரிப் பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல, ஏறக்குறைய 2,500 ஆண்டுகளாக ஆண்டும் ஆளப்பட்டும் வந்தோம்; தனி ஆட்சி வைத்திருந்தோம்; அடிமைகளாக்கவும் பட்டோம். போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் இந்நாட்டை அடிமைப்படுத்தி எங்களை ஆண்ட காலத்தில் நீங்களும் அடிமைகளாக இருந்தீர்கள்; நாங்களும் அடிமைகளாக இருந்தோம். சென்ற மே மாதம் 22ஆந் தேதி வரைக்கும் இந்நாட்டிலே எங்களுக்குச் சம உரிமை இருந்தது. அன்று நடைமுறைப்படுத்தப்பட்ட அரசியலமைப்பிலே தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்டது; தமிழர்கள் அடிமைகளாக்கப்பட்டனர்.

## நீதி வெல்லும்; உண்மை வெல்லும்.

ஓரினத்தை மதிக்கிறோம் என்றால் அந்த இனத்தின் மொழியை மதிக்கவேண்டும்; கலையை மதிக்கவேண்டும்; சமயத்தை மதிக்கவேண்டும். அப்படிச் செய்தால்தான் ஓரினத்தை மதிக்கின்றோம் என்று கூறலாம். தமிழ் மொழியைப் புறக்கணித்து விட்டு, தமிழர்களுக்குச் சிங்களத்தில் மறுமொழி முதலியவற்றைக் கொடுத்துவிட்டு, தமிழ்மொழி

யிலே சிங்களச் சொல்லையும் எழுத்தையும் புகுத்திக்கொண்டு நாம் இந்நாட்டிலே தமிழரை மதிக்கின்றோம் என்று எவரும் சொல்லமுடியாது, இந்த உண்மையை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். நாம் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள். போராடி நாம் உங்களை வெல்ல முடியாது. ஆனால், நீதி வெல்லும்; உண்மை வெல்லும்.

நீங்கள் பௌத்த சமயத்தைப் பின்பற்றுகின்றவர்கள்; தர்மத்திலே நம்பிக்கை உள்ளவர்கள். உங்கள் சிங்கள மொழியைக் குறைவாக எண்ணவேண்டும் என்று நாம் சொல்லவில்லை. சிங்கள மக்களின் கலையை, பண்பாட்டை, பெருமையை, பழைய வரலாற்றை நாம் மதிக்காமல் இருக்கவில்லை. அவற்றை நாம் மதிக்கின்றோம்; அதுபற்றிப் பெருமைப்படுகின்றோம். ஆனால் பெருமையும் பழைய வரலாறும் கொண்டு உலகிலே மிகச் சிறந்த மதங்களிலொன்றாகிய பௌத்த மதத்தின் உரிமையாளர்களாகவும் காவலாளர்களாகவும் இருக்கும் நீங்கள் எங்கள் மொழியையும் கலையையும் உணர்ச்சியையும் பாராட்டவேண்டும்; மதிக்கவேண்டும். அதுவும் பெரும்பான்மை இனமாக இருக்கும் நீங்கள் சிறுபான்மை இனமாக இருக்கும் எங்களை அணைத்துச் செல்லவேண்டும். இதைத்தான் கேட்கின்றோம்.

பல துறைகளிலும் சிங்களத்தை முன்னேற்றுங்கள். எங்களுக்கு எவ்விதம் தமிழ் மொழியில் ஆர்வம் இருக்கின்றதோ அதைப்போல், சிங்கள மொழியில் உங்களுக்கும் ஆர்வம் இருக்கவேண்டும், உங்கள் மொழியை நாம் ஒழிக்கவில்லை. நீங்கள் எங்களை ஆள முயல்கின்றீர்கள். எங்கள் மொழியில் எங்களை ஆளுங்கள் என்றுகூடக் கேட்பது குற்றமா?

## சிங்கள ஏகாதிபத்திய ஆட்சி

எனக்கு முன்னர் பேசிய கௌரவ நிந்தவூர்ப் பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல, தமிழ் தெரியாத உத்தியோகத்தர்களை—தமிழ் தெரியாத காணி

உத்தியோகத்தர்களை—தமிழ் தெரியாத காரியாதிகாரிகளை—எமது பகுதிக்கு ஆள்பவர்களாக அனுப்பினால் நீதி எங்கே நடக்கும்? ஆங்கிலேயர் ஆட்சி புரியத் தொடங்கிய காலத்தில் ஆங்கிலத்தினை ஆட்சிமொழியாக்கி மொழி பெயர்ப்பிலே எங்களை ஆண்டார்கள். இப்போது என்ன நடக்கின்றது? நீங்கள் சிங்களத்தை ஆட்சி மொழியாக்கி, தமிழ்ப் பகுதிகளை மொழி பெயர்ப்பிலே ஆள்கின்றீர்கள்.

நான் கேட்கின்றேன்! முன் வரிசையில் இருக்கும் அமைச்சர்களைப் பார்த்துக் கேட்கிறேன்! நீங்கள் எங்களுடைய பகுதிகளுக்கு உத்தியோகத்தர்களை அனுப்பும்பொழுது சிறிதேனும் தமிழ் தெரிந்தவர்களையாவது அனுப்ப முயற்சி செய்கிறீர்களா? அந்த உத்தியோகத்தர்களைத் ''தமிழைப் படியுங்கள், தமிழ்ப் பகுதிக்குப் போகப்போகிறீர்கள்'' என்றாவது சொல்கிறீர்களா? இல்லவேயில்லை. தமிழர்களை ஆளும் பொழுது கூடத் தமிழிலே ஆளமுடியாத ஏகாதிபத்திய மாக — சிங்கள ஏகாதிபத்தியமாக இன்று இந்த ஆட்சி எங்களுக்குக் காட்சியளிக்கின்றது. சிங்களப் பகுதியிலே நூற்றுக்கு நூறு வீதம் சிங்களத்திலே ஆட்சி செய்யுங்கள். என்னைக் கேட்டால் இன்னும் சிங்களப் பகுதிகளிலே சிங்களம் முழு இடமும் பெறவில்லை என்றுதான் சொல்வேன். அப்படிப் பெறச் செய்வதற்கு நாங்கள் உங்களுக்கு உதவி செய்ய ஆயத்தமாக இருக்கிறோம். ஆனால், எங்கள் பகுதிகளில் சிங்களத்தைத் திணிப்பதுதான் சிங்களத்தை வளர்ப்பது என்றால் அது இந்த நாட்டின் எதிர்காலத்தைச் சிதைத்து விடும் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

## மொழிப் போராட்டத்தால் வங்காளம் பிறந்தது.

இது நாங்கள் திரும்பத் திரும்பக் கூறுகிற ஓர் உண்மை வங்காள தேசத்தினுடைய சரித்திரத்தை அறிந்தவர்களுக்குத் தெரியும், வங்காள தேசம் தனித்தேசம் ஆகியது மொழிப் போராட்டத்தினால்தான் என்பது. பாக்கித்தான் நாட்டிலே உருதுமொழியை மட்டுமே ஆட்சிமொழி ஆக்கி

ஞர்கள். அதனுல் வங்காள மக்கள் கிளர்ந்து எழுந்து வங்காள மொழியையும் ஆட்சிமொழியாக்கவேண்டும் என்று தொடங்கிய போராட்டந்தான் இன்று பாக்கித்தான் நாடு இரண்டாகப் பிரியவும், வங்காள தேசம் உருவாகவும் வழி கோலியது. எனவே மொழிப் போராட்டம் இலங்கையில் மட்டும் உள்ள ஒரு போராட்டமன்று. அயல் நாடுகளிலும் மொழிப் போராட்டம் நடந்து இருக்கிறது. ஆனுல், அந்த நாடுகள் எல்லாம் உண்மையை உணர்ந்து மொழி உரிமையைக் கொடுத்திருக்கின்றன. ஆகையால் தமிழ் மக்களுடைய மொழியுரிமையை நீங்கள் கொடுக்காவிட்டால் – அதன்மூலம் நாங்கள் போராடுகின்ற ஒரு நிலைமையை உண்டாக்கினுல்– இந்த நாட்டிலே பொருளாதார அபிவிருத்தியும் ஏற்பட முடியாது.

உங்களுடைய ஐந்தாண்டுத் திட்டம் இப்பொழுது பின் தங்கி விட்டது. நீங்கள் தனியார் துறைக்கு 50 சதவீதத்தைக் கொடுத்திருக்கிறீகள். அவர்கள் இதில் ஈடுபட்டு உழைக்க மாட்டார்கள். எனவே 50 சதவீதம் இப்பொழுது ஐந்தாண்டுத் திட்டத்திலே பின்தங்கிவிட்டது. பொருளாதாரத் துறையிலே முன்னேற்றமடையவேண்டுமானுல் நாட்டிலே ஒற்றுமை இருக்கவேண்டும்.

## இன ஒற்றுமை எப்படி உண்டாகும்

இந்த நாட்டில் ஒற்றுமை எப்படி வரும்? இந்த நாட்டில் வாழுகின்ற எல்லா மக்களும் இந்த நாடு எங்களுடைய நாடு; இந்த நாட்டை நாமே ஆளுகிறேம் என்று உணர்கின்ற ஒரு நிலையை உண்டாக்க வேண்டும். நான் சிங்களப் பெருமக்களை நோக்கி ஒன்று கூற விரும்புகிறேன். நாங்கள் உங்களுடைய உணர்ச்சியைக் குறைக்கவில்லை. உங்களுக்காக நாங்கள் பேசமாட்டோம். நீங்கள் உங்கள் மொழியிலே எவ்வளவு பற்று வைத்திருக்கிறீர்கள் என்பதைப்பற்றி நாங்கள் சொல்லமாட்டோம். நீங்கள் உண்மையான சிங்களவர்களா இல்லையா என்பதை நீங்களே தீர்க்க

வேண்டும். உங்களுக்குள்ளேகூடப் போலிகள் சிலர் இருக்கலாம். உங்களுக்குள்ளே சிங்கள மொழியை விரும்பாதவர்கள் இருக்கலாம். ஆனல், தமிழை மதிக்கிறவர்கள் என்ன கேட்கிருர்கள்? தமிழ் மொழிக்கு உரிமை கொடுக்க வேண்டும் என்றுதான் கேட்கிருர்கள்.

## யாரேனும் மொழி உரிமை வேண்டாம் என்கிருர்களா?

இன்று இருக்கிற தமிழ் மக்களிலே — சிங்கள மக்களில் ஏறக்குறைய மூன்றிலொரு பங்காக இருக்கும் தமிழ் மக்களிலே — எவராவது தம்முடைய மொழிக்கு உரிமை வேண்டாம் என்று சொல்கிருரா? இதைத்தான் நாங்கள் கேட்கிறேம். எனவே, முழு இனமும்—தமிழ் மக்கள் எல்லோரும் – சேர்ந்து தமிழ் மொழிக்கு உரிமை கொடுங்கள் என்று கேட்கிறபொழுது அதைத் தட்டிக் கழித்துக்கொண்டு வருகிறீர்கள். எத்தனை நாட்கள் நாங்கள் இந்த நாட்டிலே உரிமையின்றி வாழ முடியும்? பிரித்தானிய அரசாங்கத்தின் கீழ் அடிமைப்பட்டுக் கிடந்தோம். ஒருநாள், இரண்டு நாள் அல்ல. எத்தனையோ ஆண்டுகளாக நாம் போராடித்தான் உரிமை பெற்று இப்பொழுது விடுதலை அடைந்தோம், அப்படி உரிமை பெற்ற நாங்கள் இப்பொழுது இன்னெரு ஏகாதிபத்தியத்துக்கு — சிங்கள ஏகாதிபத்தியத்துக்கு - அடிமைகளாகிறேம் என்ற அச்சம்தான் எங்களுக்கு இருக்கிறது. அதை நீக்க வேண்டியது பெரும்பான்மை இனமாகிய உங்களுடைய கடமை ஆகும்.

கௌரவ பாரர்ளுமன்ற அலுவல்கள், விளையாட்டுத் துறை அமைச்சர் இப்பொழுது ஏதோ கூறுகிருர். அவர் யாழ்ப்பாணத்துக்கு வந்தபொழுது, தமிழிலே கடிதங்கள் எழுதினல் நாங்கள் தமிழிலேயே மறுமொழி அனுப்புவோம்; அப்படிச் செய்யாவிட்டால் எங்களுக்குச் சொல்லுங்கள் என்று கூறினர். ஆனல், இப்பொழுது மறுமொழி அனுப்புவது ஆங்கிலத்திலும் சிங்களத்திலுமே. நான் எத்

தனையோ முறை இதைச் சுட்டிக் காட்டினேன். தமிழ் மொழிப் புறக்கணிப்புக் கண்காட்சி நடத்தி அதற்கு அமைச்சரை வந்து பாருங்கள் என்று அழைத்தேன்.

## தமிழ் மொழிச் சட்டம் உயிர் போன பிணம்

1958ஆம் ஆண்டு ஒரு தமிழ் மொழிச் சட்டம் இயற்றினீர்கள். அந்தச் சட்டத்தைக் காலஞ் சென்ற பண்டாரநாயக்கா அவர்கள பாராளுமன்றத்தில் நிறைவேற்றினுர். அப்பொழுது, இந்தச் சட்டத்தின்படி இன்னும் ஓராண்டுக்குள்ளே இந்தத் தமிழ்மொழிப் பிரச்சினை தீர்க்கப்பட்டு விடும்என்று அவர் சொன்னுர். ஆனுல், இன்னும் தமிழ் மொழிப்பிரச்சினை தீர்க்கப்படவில்லை. 1960 ஆம் ஆண்டு அந்தச் சட்டத்துக்குப் பிரமாணங்களைக் கொண்டுவந்து பாராளுமன்றத்திலே சமர்ப்பித்தீர்கள், அந்தப் பிரமாணங்கள் மீட்கப்பட்டன. பின்னர் அந்தச் சட்டத்துக்குப் பிரமாணங்கள் 1966 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டன.

இந்தத் தமிழ் மொழிச் சட்டம் ஒரு ஏமாற்றுச் சட்டம்; உயிர் அற்ற பிணம். இந்தச் சட்ட த்துக்குப் பிரமாணங்கள் இல்லாவிட்டால் இதை நடைமுறைப்படுத்த முடியாது. முதலில் கொண்டுவந்த பிரமாணங்களை 1960 ஆம் ஆண்டு மீட்டீர்கள். 1966 ஆம் ஆண்டு கொண்டு வந்த பிரமாணங்களை நடைமுறைப்படுத்தமாட்டோம் என்று இந்தச் சபையிலே மூன்று முறை கூறினீர்கள். ஏன் அரசியல் அமைப்புச் சபையிலும் ஒரு தரம் கூறினீர்கள். பிரமாணம் இல்லாமல் நிறைவேற்ற முடியாத சட்டம் உயிர் அற்ற பிணம் தானே? அந்தப் பிணத்தை அரசியல் அமைப்பில் வைத்துவிட்டு அந்தப் பிணத்துக்கு அருகில் பிரமாணங்களையும் வைத்து இருக்கிறீர்கள். பிரமாணங்கள் அரசியல் அமைப்பில் சேர்க்கப்பட்டாலும் அவற்றுக்கு அரசியல் சட்ட உரிமை இல்லை. இவை ஒருவேளை ''செல்லுமோ'' என்ற சந்தேகத்தை-கவலையைத்-தீர்க்கத்தான் வைத்திருக்கிறேம் என்று கூறிவிட்டீர்கள். இனி இந்தத் தமிழ் மொழிப் பிர

அன்மார்க்க இளைஞர் சங்கம்



மாணங்களினுல் என்ன பலன்? என்று சிந்திக்கத்தக்கவர்களைப் பார்த்துக் கேட்கிறேன். சிந்திக்க மறுப்பவர்களைப் பார்த்து நான் இதைக் கேட்கவில்லை. செல்லாத சட்டத்தைக் கொடுத்துவிட்டு முப்பத்தைந்து இலட்சம் தமிழ் மக்களுக்கு நாங்கள் தமிழ் உரிமையைத் தந்துவிட்டோம் என்று நீங்கள் கூறினுல் அதை நாங்கள் ஏற்கமுடியுமா? இதைப் பற்றி நான் ஒரு பகிரங்கக் கடிதம் பிரதமருக்கு எழுதியிருக்கிறேன். அந்தக் கடிதத்தை நான் இங்கு சமர்ப்பிக்கிறேன்.*

## டெயிலி நியூசுப் பத்திரிகையும் கூறுகிறது!

தோட்டப்பகுதித் தமிழ் மக்களுக்குப் பிரதிநிதியாக இச் சபையிலே நியமிக்கப்பட்டுள்ளவர் நேற்று இச்சபையிலே பேசும்பொழுது 'டெயிலி நியூசு' பத்திரிகைகூட இந்த நாட்டுத் தமிழ் மக்களுக்கு ஒரு குறை இருக்கின்றது என்று எழுதியுளது என்று குறிப்பிட்டார். அந்தக் குறையைத் தீர்க்க நீங்கள் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள் என்று நான் கேட்கிறேன். இப்பொழுது நியமன அங்கத்தவரும் சொல்கிருர், பத்திரிகைகளும் சொல்கின்றன; இந்த நாட்டிலே தமிழ் மக்களுக்கு ஒரு குறை இருப்பதாக, இந்தக் குறையை நீக்க நீங்கள் என்ன செய்து இருக்கிறீர்கள்? இதுவரை என்ன செய்யப்பட்டது? எங்களுடைய இந்தக் குறையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்காவிட்டால் இந்த நாட்டில் அமைதி ஏற்படாது. தமிழ் மக்கள் எந்த அரசாங்கத்துடனும் ஒத்துழைக்கமாட்டார்கள். இந்த நாடு என்றும் போராட்டக் காட்சியையே காணும்.

## 'அப்புக்காத்து' நியாயம்

தமிழ் மொழிச் சட்டத்தையும் சிங்களம் மட்டும் சட்டத்தையும் நடைமுறைப்படுத்துவதற்குப் பொறுப்பாக

*இக்கடிதம் இறுதியில் சேர்க்கப்பட்டுளது.

இருக்கின்ற அரசாங்க நிருவாகம் உள்ளூராட்சி உள்நாட்டலுவல்கள் அமைச்சர் அவர்கள் அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வந்தார். அவர் இன்று தமிழ் படிக்கிறார். இந்தச் சபையிலும் தமிழ் படிப்பதாகத் தெரிவித்துள்ளார். அவர் யாழ்ப்பாணத்திலே அரைமணி நேரம் தமிழில் அழகாகப் பேசினாராம். அவர் அங்கு ''நான் தமிழ் படிக்கிறேன் நீங்கள் ஏன் சிங்களம் படிக்கக்கூடாது'' என்று கேட்டார். அவர் என்ன கருத்தில் இதைச் சொன்னார் என்று தெரியவில்லை. எங்கள் பகுதிகளில் 'அப்புக்காத்து நியாயம்' என்று ஒரு வழக்கு இருக்கின்றது. வெல்ல முடியாத ஒருவிடயத்தைக் குழப்பவேண்டும் என்றால் அதற்குப் பொருத்தமில்லாத மயக்கம் தரும் நியாயத்தைச் சிலர் கூறுவர். அதைப் போலத்தான் அமைச்சரும் பேசி இருக்கிறார். அவருக்கு **26-1-72** இல் நான் ஒரு கடிதத்தை அனுப்பினேன்.

நான் அவருக்கு ''நாங்களும் நீங்களும் மட்டும் தமிழ் பேசினால் போதாது; இந்நாட்டிலே இருக்கின்ற தமிழ் மக்களைத் தமிழிலே ஆட்சி செய்யவேண்டும்'' என்று வற்புறுத்தி இக் கடிதத்தை எழுதினேன். இக்கடிதம் முழுவதையும் நான் இப்பொழுது வாசிக்கவில்லை. இதனை அதிகார அறிக்கையிற் சேர்ப்பதற்கு இங்கே சமர்ப்பிக்கின்றேன்.‡

## ஏமாற்று வித்தை!

''இந்த அரசியல் அமைப்பில் தமிழ் மொழிச் சட்டத்தைச் சேர்த்துவிட்டோம்; தமிழ் மொழிப் பிரமாணங்களைச் சேர்த்து விட்டோம்; உங்களுக்குத் தமிழ் உரிமை கிடைத்து விட்டது'' என்று சொல்லுவது ஒரு ஏமாற்று வித்தையே.

''தமிழர் எங்கே வாழ்ந்தாலும் நீதி மன்றங்களிலே தமிழிலே பேசலாம்; நீதிமன்றங்களிலே வழக்கறிஞர்களும் தமிழிலே பேசலாம்'' என்று கூறப்பட்டது. இப்பொழுது

‡ இக்கடிதமும் இறுதியில் சேர்க்கப்பட்டுள்ளது.

நீதிமன்றங்கள் எங்கேயிருந்தாலும் தமிழ் வழக்கறிஞர்கள் தமிழிலே பேசலாம். இந்த உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். இந்த உரிமை ஏன் கொடுக்கப்பட்டது? மே மாதம் 22ந் தேதி இந்த நாட்டிலே நிறுவப்பட்ட குடியரசிலே – அந்தக் குடியரசு அரசியலமைப்புச் சட்டப்படி சிங்களம்தான் இந்த நாட்டிலே உள்ள எல்லா நீதிமன்றங்களிலும் பதிவேட்டு மொழியும் பேச்சு மொழியுமாக ஆக்கப்பட்டிருக்கிறது. எனவே, அன்றுதொடக்கம் எங்களுடைய கௌரவ கபருதுவைப் பிரதிநிதி அவர்கள் சொல்லுவது போல, நூறு வீதமும் சிங்கள மயமாக இருக்குமென்றால், பாவம் எங்களுடைய வழக்கறிஞர்கள் வாயைத் திறக்க முடியாத நிலைமைதான் வந்துவிடும்! எனவே, சிங்களத்திலே எல்லாச் சட்டங்களையும் ஆக்கும் வரையும் ஓர் அவகாசம் கொடுக்கப்பட்டிருக்கிறது. வழக்கறிஞர்கள் சிங்களத்திலே பெரும் புலமை பெறும்வரையும் ஒரு அவகாசம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

## பலியிடப்படும் ஆட்டுக் கடாவின் மகிழ்ச்சி

ஆட்டுக் கடாவைப் பலியிடுவதற்கு முன்னர் ஆட்டுக் கடாவுக்குக் குழையைக் கொடுக்கும் பொழுது ஆட்டுக் கடா எப்படி மகிழ்ச்சியோடு உண்ணுகிறதோ அந்த மகிழ்ச்சிதான் சில தமிழர்களுக்கு. ''ஓ எங்களைத் தமிழிலே பேச விட்டு விட்டார்கள்'' என்று அவர்கள் மகிழ்ச்சி அடைகிறார்கள். ஆனால், சிங்களத்திலே சட்டம் இருக்கும் என்றால் எந்த நீதிமன்ற நடுவர் தமிழிலேயிருக்கின்ற மொழிபெயர்ப்பைப் பயன்படுத்தித் தீர்ப்புக் கூறுவார். இன்றைக்கு ஆங்கிலத்திலே புலமையிருக்கின்றபடியால் கௌரவ அரசாங்க நிருவாக, உள்ளூராட்சி உள்நாட்டலுவல்கள் அமைச்சர் சிறந்த வழக்கறிஞராக இருக்கின்றார். ஆங்கிலத்திலே சட்டங்கள் இருக்கின்றபடியால், ஆங்கிலப் புலமை தேவைப்படுகின்றது. சிங்களத்திலே சட்டங்கள் வந்துவிட்டால்–எந்த வழக்கறிஞரும் சிங்களத்தில் புலமை பெறாமல் வழக்கறிஞராக இருக்கமுடியாது. எங்களுடைய

தமிழ் வழக்கறிஞர்கள் சிங்களப் புலமை பெறுதற்கு ஓர் அவகாசம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மீண்டுங் கூறுகின்றேன்: சிங்களத்திலே சட்டங்கள் வரும் வரையும் ஓர் அவகாசம் கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, எப்படித் தமிழ் அரசாங்க ஊழியர்களையெல்லாம் சிங்களம் படிக்கக் கட்டாயப்படுத்தினார்களோ அதைப்போல் எங்களுடைய தமிழ் வழக்கறிஞர்களைக் கட்டாயப்படுத்தாமலே சிங்களத்திலே புலமைபெறச் செய்ய இந்த அரசியலமைப்பில் வழி வகுக்கப்பட்டுளது.

## மொழிபெயர்ப்பு ஒரு "மோசடி"

அடுத்ததாகத் தமிழர்களுக்குச் சட்டங்கள் எப்படிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைப் பார்ப்போம்! மொழிபெயர்ப்பிலே கொடுக்கப்பட்டிருக்கின்றன. மொழி பெயர்ப்பின் மதிப்பைப்பற்றி நான் சொல்லவேண்டியதில்லை. மட்டக்களப்பு முதலாவது பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள் கௌரவ தோட்டத் தொழில் அமைச்சரவர்களின் கட்டுரையின் தமிழ் மொழி பெயர்ப்பை அரசியல் அமைப்புச் சபையிலே வாசித்தபொழுது "மொழிபெயர்ப்பு ஒரு பெரும் மோசடி" என்று கௌரவ அமைச்சர் சிங்கக் குரலிலே கர்ச்சித்தார். 'மொழி பெயர்ப்பிலே ஒரு சொல்லைத்தானும் தாம் ஏற்க முடியாது' என்று கௌரவ அமைச்சர் அங்கே கூறினார். ஆகவே, மொழிபெயர்ப்பினால் என்ன பயன்? "உங்களுக்குச் சட்டம் எல்லாம் மொழி பெயர்ப்பிலே தருவோம்" என்றால், அதனால் எங்கள்மீது அடிமை முத்திரைதான் பொறிக்கப்படுகிறது.

ஏன் சட்டங்களைத் தமிழிலே தரக்கூடாது? கனடாவிலே இரண்டு மொழிகளிலே சட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றனவென்று நாங்கள் அரசியல் அமைப்புச் சபையிலே இல்லாத சமயத்திலே, யாழ்ப்பாணப் பிரதிநிதியவர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்றார்கள்.

## சிங்களவருக்கு அரிசி; தமிழருக்கு உமியா?

தமிழருக்கு மொழி பெயர்ப்பிலே சட்டத்தைத் தந்தால் அது உமியைத் தருதல் போன்றது. எனவே அரிசி சிங்கள மக்களுக்கு; உமி எங்களுக்கா? அரிசியிலிருந்து சோற்றை ஆக்கலாம்; உமியிலிருந்து சோற்றை எவரேனும் ஆக்குவார்களா?

மூலம் ஒரு பழுத்த மாம்பழம் என்றால் மொழிபெயர்ப்பு மண்ணாலே செய்யப்பட்ட மாம்பழம். மண்ணாலே செய்த மாம்பழத்தைத் தந்து ''இது உங்களுக்குப் போதும், தின்னுங்கள்; நீங்கள் சிறுபான்மை இனம், நாம் இந் நாட்டின் பெரும்பான்மை இனம்; நன்றாகப் பழுத்த மாம்பழம் எங்களுக்குத்தான்'' என்று சொன்னால் அதை நல்ல பழம் என்று கண்கெட்டவர்கள்-அறிவில்லாதவர்கள்தாம் ஏற்றுக் கொள்வார்கள்; அறிவுடையோர்கள் ஏற்பார்களா? ஆகவே, அரசியலமைப்பிலே மொழிபெயர்ப்புத் தருகின்றோம் என்று சொல்வதில் பயனில்லை.

## அடிமைச் சாசனம் எனும் நூலிலிருந்து......

இந்த அரசியலமைப்பு என்ன செய்திருக்கின்றது? இந்த அரசியலமைப்பைப்பற்றி நான் ஒரு நூல் எழுதியிருக்கின்றேன். ''அடிமைச் சாசனம்'' என்ற அந்த நூலில் 21 ஆம் 22 ஆம் பக்கங்களிலே நான் பின்வருமாறு கூறியிருக்கின்றேன்;

''இந்த அரசியலமைப்பால் சிங்கள மொழி பெறும் உயர் நிலையையும் தமிழ் மொழி பெறும் இழிநிலையையும் வரிசைப் படுத்திக் காட்டுகின்றேன்.

1. சாதாரண சட்டமான சிங்களம்மட்டும் சட்டம் அரசியலமைப்பில் ஒரு பகுதியாக இலகுவில் மாற்ற முடியாமல் பாதுகாக்கப்பட்டுள்ளது.

2. சில்லறை ஏமாற்றுவதற்காகப் பிரமாணங்களின்றி இயங்காத தமிழ் மொழிச் சட்டம் உயிர்போன பிணமாக்கப்பட்டு அரசியலமைப்பிலே சேர்க்கப்பட்டுள்ளது.

3. ''நடைமுறைப்படுத்தமாட்டோம்'' என்று அரசாங்கம் பலமுறை வற்புறுத்திக் கூறிய தமிழ் மொழிப் பிரமாணங்கள் அரசியலமைப்பின் ஒரு பகுதியாகாது, ஒரு சாதாரண துணைச் சட்டம்தான் என்று கூறிச் சிங்களத் தீவிரவாதிகளின் சந்தேகத்தை நீக்குதற்கு இப்பிரமாணங்கள் திருத்தமாக அரசியலமைப்பில் நுழைக்கப்பட்டுள்ளன.

4. சிங்களமே இந்நாட்டு நீதிமன்றங்களின் பேச்சு மொழியும் பதிவேட்டு மொழியும் என்று அரசியலமைப்பில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

5. தமிழ்ப் பகுதிகளில்தானும் தமிழ் பதிவேட்டு மொழியாயிருக்கும் என்பதைக்கூட அரசியலமைப்புக் கூறவில்லை.

6. சிங்களத்திலேயே சட்டங்கள் ஆக்கப்படும் என்று தனிப் புது உரிமை சிங்கள மொழிக்கு அரசியல் அமைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

7. தமிழ் மொழியில் சட்டமொழி பெயர்ப்பே கொடுக்கப்படுமென்று அரசியலமைப்பில் கூறித் தமிழ் மக்கள் மீது அடிமை முத்திரை பொறிக்கப்பட்டுள்ளது.''

இவை அரசியலமைப்பு சிங்கள மொழிக்குக் கொடுத்த தனிப் பாதுகாப்பையும் தமிழ் மொழியைப் புறக்கணித்த வண்ணத்தையும் நன்கு புலப்படுத்துகின்றன .என்பதை இங்கு அழுத்தம் திருத்தமாகக் கூறவிரும்புகின்றேன்.

இந்த அரசியலமைப்பிலே எங்கள் மொழியைப் புறக்கணித்துவிட்டு எங்களை நீங்கள் மதிப்பதாகச் சொல்லுவது எந்த வகையிலும் பொருத்தமானதாக இல்லை.

## சிங்களச் சொல்லும் எழுத்தும் தமிழில் நுழைக்கப் படுகின்றன.

இப்போது சூழ்ச்சி செய்து சிங்களச் சொல்லைத் தமிழிலே புகுத்துகின்றார்கள். இதனை இதற்குப் பொறுப்பான அமைச்சர் அவர்களின் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகின்றேன், நான், தமிழ் தனித் தமிழாக இருக்கவேண்டும் என்ற கொள்கையுடையவன். சிங்களச் சொல்லைத் தமிழில் புகுத்துவதுடன் நில்லாமல் சிங்கள எழுத்தையும் தமிழில் புகுத்த முயல்கிறார்கள். அரசாங்க அலுவலகங்கள் அனுப்பும் தமிழ் மொழி பெயர்ப்பிலே தேதி இருக்காது. அது அரைகுறை மொழி பெயர்ப்பாகவே இருக்கும். சிங்களம் தெரியாதவர்கள் தெரிந்தவர்களிடம் போய்க் கடிதத்தின் தேதியை அறிய வேண்டும். அதையும் விடுவோம். அது தற்செயலாக நிகழ்ந்தது என்று அமைச்சரோ வேறு யாருமோ சொல்லலாம்.

சிங்கள எழுத்துக்களை மெல்ல மெல்லத் தமிழில் நுழைக்கச் சூழ்ச்சி நடக்கின்றது. இதனை நான் அமைச்சருடைய கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகின்றேன்,

## ஆணையாளரின் சேட்டை!

அரசகரும மொழித் திணைக்களத்திலிருந்து தமிழ் மொழி பெயர்ப்புடன் சிங்களத்தில் எனக்கு அனுப்பப்பட்ட கடிதம் இங்கே இருக்கின்றது. மொழி பெயர்ப்பின் எண்ணிலே சில சிங்கள எழுத்துக்களைக் குறித்துவிட்டு அவற்றுக்கு அப்பால் 3|4 என்று குறிக்கப்பட்டிருக்கின்றது. இது முதற் கடிதம் அன்று. ஆகவே, இதுபற்றி அரசகரும மொழித் திணைக்கள ஆணையாளருக்கு ஒரு கடிதம் எழுதினேன். ''தமிழ் மொழி பெயர்ப்பிலே சிங்களத்தை ஏன் இலக்கம் என்ற போர்வையில் புகுத்துகின்றீர்கள். சிங்களம் தெரியாதவர்கள் அந்த எண்ணைக் குறிப்பிட்டு உங்களுக்கு எப்படிக் கடிதம் எழுதலாம்—'' என்று அவரிடம் கேட்டிருந்தேன்.

இது ஒரு சிறிய சேட்டை. இது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமோ என்பது தெரியாது. தமிழர்களுக்குத் தமிழ் மொழிபெயர்ப்பினை அனுப்பும்போது அந்த மொழி பெயர்ப்பில் சிங்கள எழுத்துக்களை அடையாள இலக்கமாக நுழைக்கிறார்கள். நான் இந்தச் சிறிய அலுவலுக்காக அமைச்சர் அவர்களுடைய நேரத்தை வீணாக்க விரும்பாத படியால் அருசகரும மொழி ஆணையாளர் திருவாளர் பீற்றர் அபேசேகராவுக்கு இதைப்பற்றி எழுதிய கடிதத்துக்கு அவர் 30–6–72 இல் எழுதிய மறுமொழியைக் கவனியுங்கள்! அவர் அந்தச் சிங்கள எழுத்துக்களை அப்படியே குறித்து விட்டு(.....................)''என்னும் எழுத்துக்கள் இலக்கத்தின் முன்னால் இடப்பட்டுள்ள குறியீடுகள் மட்டுமே; அவை அதே வண்ணம் தமிழில் உச்சரிக்கப்படும் வகையில் எழுதப்பட இயலாதாகையால் மூலப்படியில் உள்ளவாறு குறிக்கப்பட்டன; மொழிபெயர்ப்புக் கேள்வி இங்கே எழாது'' என்று எழுதியிருக்கிறார்.

## யப்பான் எழுத்தை ஏற்பீர்களா?

சிங்களத்தில் எழுதிய கடிதத்துக்கு யாரேனும் ஓர் உத்தியோகத்தர்–சீன எழுத்துக்கள் என்று நான் கூறவிரும்பவில்லை; ஏனெனில், நீங்கள் இப்பொழுது சீனாவுடன் நெருங்கி உறவாடுகிறீர்கள்–யப்பானிய எழுத்துக்களைச் சேர்த்து மறுமொழி அனுப்பியிருந்தால் அதைச் சிங்கள மக்கள் ஏற்றுக்கொள்வார்களா என்று நான் கேட்கிறேன். விளங்காத எழுத்துக்களை ஏன் புகுத்துகிறார்கள்? இதை நான் அமைச்சருடைய கவனத்துக்குக் கொண்டு வருதற்காக அந்தக் கடிதத்தை அவருடைய பார்வைக்காக அனுப்புகிறேன். இப்படி நடப்பது இங்கே இருக்கும் கௌரவ உறுப்பினர்களுக்குத் தெரியாது; கௌரவ அமைச்சருக்குந் தெரியாது என்பதற்காகத்தான் நான் இதை இங்கே கூறினேன். இப்படித் தமிழ் மக்களுக்கு எவ்வளவோ துன்பத்தையும் துயரையும் அரசாங்க உத்தியோகத்தர்கள் உண்டாக்கி வருகிறார்கள்.

## தமிழர்களுக்கு எதுவும் கொடுக்கப்படவில்லை

இன்னும் ஒன்றை நான் குறிப்பிடவேண்டும். இந்த நாட்டிலே தமிழ் மக்களுடைய மொழி மட்டும் புறக்கணிக்கப்படவில்லை, மேல் சபையிலே நீதி அமைச்சர் ''நாங்கள் இந்த நாட்டிலே தமிழர்களுக்கு எதையும் கொடுக்க மாட்டோம்'' என்று கூறியிருக்கிறார். இந்த அடிப்படையிலே தான் அரசியல் அமைப்பிலே தமிழர்களுக்கு ஒன்றும் கொடுக்கப்படவில்லை. பௌத்த சமயத்தை விட வேறு எந்தச் சமயத்தையும் அரசியலமைப்புக் குறிப்பிடவில்லை.

தமிழர்களுக்கு ஒரு சனாதிபதி பதவியோ துணைச்சனாதிபதி பதவியோ உயர் நீதிமன்ற நீதியரசர் பதவியோ எதையும் கொடுப்பது இல்லை என்ற அடிப்படையில்தான் சனாதிபதியைக்கூட முதலமைச்சர் தெரிந்து எடுக்கும் அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. சனாதிபதிப் பதவி உள்ளநாடுகளில் எல்லாம் தேர்தல் மூலம்தான் சனாதிபதியைத் தேர்ந்தெடுக்கிறார்கள். ஆனால், இங்கே என்ன நடக்கிறது? முதலமைச்சராக வருகிறவர் அவரை நியமிக்கிறார், ஏன் மக்களால் தெரிவு செய்யப்படவில்லை? மூன்றில் ஒரு பங்காக இருக்கும் சிறுபான்மை இன மக்களும் பெரும்பான்மை இன மக்களிலே வேற்றுச் சமயத்தைச் சேர்ந்தவர்களும் ஒன்று சேர்ந்தால் பௌத்த சிங்களவர் அல்லாத ஒருவர் சனாதிபதியாக வந்துவிடலாம் என்ற பயத்தினால்தான் இவ்வாறு அவர்கள் அரசியல் திட்டத்தை வகுத்திருக்கிறார்கள்.

ஏனைய நாடுகளில் துணைச் சனாதிபதிகள் இருக்கிறார்கள். இங்கே துணைச் சனாதிபதி ஏன் நியமிக்கப்படவில்லை? ஒரு தமிழரையோ அல்லது ஒரு முசிலிமையோ துணைச் சனாதிபதியாக்க வேண்டிய ஒரு நிலைமையை உண்டாக்க விரும்பாமையாலே இது செய்யப்படவில்லை.

எனவே உயர் உத்தியோகங்களைத் தமிழருக்குக் கொடுக்கப்படாது என்ற அடிப்படையிலே—ஒரு பௌத்த சிங்கள ஏகாதிபத்திய அடிப்படையிலே இந்த அரசியல் சட்

டம் வகுக்கப்பட்டிருக்கிறது என்று தமிழ் மக்கள் கூறத்தக்க அளவுக்கு அரசியல் அமைப்பு தமிழ் மக்களின் உரிமைகளை யெல்லாம் புறக்கணித்து வகுக்கப்பட்டிருக்கிறது.

## தமிழ் மொழிக்கு அரசியல் உரிமை - ஆட்சி உரிமை இல்லை.

ஒரு மொழிக்கு உண்மையான அரசியல் உரிமை— ஆட்சி உரிமை — கொடுக்கப்பட்டுளது என்ருல் அந்த மொழி நாட்டிலே எல்லாத் துறைகளிலும் வழங்கப்படல் வேண்டும். ஒரு மொழியினை உபயோகிப்பதற்குக் கொடுக் கப்படும் சட்டமுறையான பாதுகாப்பே மொழி உரிமைப் பாதுகாப்பு ஆகும். ஒரு மொழிக்குப் பாதுகாப்புக் கொடுக் கப்பட்டுளது என்ருல் அந்த மொழிக்குப் பாதுகாப்பான சிறந்த ஒரு சட்டம் இருக்கவேண்டும். அரசாங்க அலுவல் களிலும், பாராளுமன்ற நடவடிக்கைகளிலும், சட்டநட வடிக்கைகளிலும், அரசாங்கத்தின் நாளாந்த நிருவாகத்தி லும், நீதி வழங்கலிலும், கல்வித் துறைகளிலும் அந்த மொழியை உபயோகித்தல் செறிந்து இருத்தல்வேண்டும். இந்தத் துறைகளிலெல்லாம் அது செறிந்து இருந்தால்தான் அம் மொழிக்குச் சட்டஉரிமை கொடுக்கப்பட்டுளது என்று கூறலாம்.

## இல்லை! இல்லை!! இல்லை!!!

இலங்கையிலே சிங்கள மொழிக்குத் தனிச் சிறப்பான இடமும் சட்டப் பர்துகாப்பும் அரசியல் அமைப்பில் உள. தமிழ் மொழிக்குச் சட்டப் பாதுகாப்பு இல்லை.

சிங்களம் எல்லாத் துறைகளிலும் தனியாட்சி செய்கி றது. தமிழுக்கு அரசாங்க அலுவல்களில் இடமுண்டா? இல்லை.

தமிழுக்குப் பாராளுமன்ற நடவடிக்கைகளில் இட முண்டா? சட்டமுறையான இடமில்லை.

தமிழுக்குச் சட்ட நடவடிக்கைகளில் இடமுண்டா? இல்லை.

தமிழுக்கு அரசாங்கத்தின் நாளாந்த நிருவாகத்தில் இடமுண்டா? இல்லை.

நீதிவழங்கலில் இடமுண்டா? இல்லை.

தமிழுக்கு கல்வித்துறைகளில் இடமுண்டா? அரை குறை இடமுண்டு.

எனவே, சட்டமுறையான பாதுகாப்புத் தமிழ் மொழிக்கு இந்த நாட்டிலே அளிக்கப்படவில்லை. அப்படி அளிக்கப்பட்டிருந்தால் இவற்றிலெல்லாம் அந்த உரிமை செறிந்திருக்கவேண்டும். இப்பொழுது அப்படிச் செறிந்திருக்கவில்லை. ஆகையால், நாம் தமிழ் மொழி உரிமை இழந்தவர்களாக இரண்டாந்தரப் பிரசைகளாக இருக்கிறோம்.

## பிரிவினை பிரிவினை என்றால் பிரிவினை வந்தேவிடும்!

சரித்திரம் திரும்பி நடைபோடாமல் நாம் ஒன்றுபட்டு இருக்கவேண்டுமானால் எங்களுடைய — சிறுபான்மையினருடைய— உணர்ச்சிகளை நீங்கள் மதித்து, எங்களுடைய குறைபாடுகளைத் தீர்க்க எண்ண வேண்டும். அப்படியான ஓர் எண்ணம் இப்பொழுதும் உங்களிடம் இல்லையென்று எங்களுக்கு தெரியும். இது மிகவும் வருந்தத்தக்க நிலை. நெடுகப் ''புலி புலி'' என்று சொன்னால் ஒருநாள் உண்மையில் புலி வந்துதான் விடும். அதுபோல நாங்கள் பிரிவினை கேட்கிறோம் கேட்கிறோம் என்று நீங்கள் அதைச் சாட்டாகத் திரும்பத் திரும்பத் சொல்லிக்கொண்டிருந்தால் ஒருநாளைக்குப் பிரிவினை வந்தே தீரும். நாங்கள் பிரிவினையைத் தவிர்ப்பதற்காகத்தான் இணைப்பு ஆட்சி கேட்டுக் கொண்டிருக்கிறோம். ஆனால் நீங்கள் அதை மாற்றிப்

## மூன்று மாத அவகாசம்!

இந்த நாட்டிலே நாங்கள் பொறுப்புணர்ச்சியோடு தான் பேசுகிறோம். நான் அரசியல் அமைப்புச் சபையில் பேசும்பொழுது சொன்னேன்: ''நாங்கள் அரசியலமைப்புச் சபையிலிருந்து விலகினால் புதிய அரசியலமைப்புப் பிரகடனஞ் செய்யும் தினத்தைத் துக்கதினமாகக் கொண்டாடுவோம், கறுப்புக் கொடி தூக்குவோம்'' என்று. அப்படி நடந்தது என்பதை எவரும் மறுக்க முடியாது. இந்த விடயத்தை உங்கள் வானொலியும் பத்திரிகைகளும் சொல்லா விட்டாலும் அவுத்திரேலிய வானொலியும், பி. பி. சி. வானொலியும், பாரதநாட்டு வானொலியும்கூட நாங்கள் செய்தவற்றை எடுத்துக் கூறின.

நாங்கள் அரசியல் அமைப்பை எரித்தோம், ஏன்? எங்கள் வேதனையை, வெறுப்பைக் காட்ட அது ஒரு வழியாக இருந்தது. எந்தத் தியாகத்தையும் செய்து எங்கள் உரிமையைப் பெற நாங்கள் ஆயத்தமாக இருக்கிறோம். இந்த அரசாங்கத்துக்கு நாங்கள் மூன்று மாத அவகாசம் கொடுத்திருக்கிறோம். எங்கள் உரிமைகளைத் தராவிட்டால் நாங்கள் நேரடி நடவடிக்கையை—சட்ட மறுப்பை — மேற்கொள்வோம். அதைத் தன்மானமுள்ள எந்த மனிதனும் செய்ய வேண்டாம் என்று சொல்லமாட்டான்.

## முப்பத்தைந்து லட்சம் மக்களின் இறைமை எங்கே?

எந்த நாட்டில் இரண்டாவது பெரிய இனம் மொழி உரிமை பறிக்கப்பட்டு அடிமையாக்கப்பட்டு இருக்கின்றது?

எந்த நாட்டில் அந்த நாட்டை ஆண்ட இனம் அன்னிய மொழியால் ஆளப்படுகின்றது?

எந்த நாட்டில் அந்த நாட்டின் இரண்டாவது பெரிய இனத்துக்கு மொழிபெயர்ப்புக் கொடுக்கப்படுகின்றது?

''புலி புலி என்று சொன்னால் – பிரிவினை பிரிவினை என்று'' சொன்னால் நீங்களே பிரிவினைக்கு வித்திட்டவர்களாக–இந்த நாட்டிலே பிரிவினையை உருவாக்கியவர்களாக ஆகுவீர்கள் என்பதை நான் இங்கே சொல்லவேண்டியவனாக இருக்கிறேன். சிங்களம் மட்டும் சட்டம் சென்ற பல ஆண்டுகளாகத் தமிழ் மக்களையும் சிங்கள மக்களையும் பல துறைகளில் பிரித்துவைத்திருக்கின்றது. இனிப் பிரதேசம்தான் பிரிய வேண்டும்.

## இளைஞர்களின் எழுச்சி

இன்று தமிழ் இளைஞர்களும் மிக எழுச்சி கொண்டிருக்கிறார்கள். ''நீங்கள் தேசிய அரச சபைக்குப் போக வேண்டாம். அந்தச் சபையில் உங்களுக்கு என்ன அலுவல் இருக்கிறது'' என்று சொல்லும் அளவுக்கு இளைஞர்கள் சிலர் வெறுப்பும் வேதனையும் கொண்டுளர். இந்த இளைஞர்களது உணர்ச்சியை நீங்கள் மதிக்கவேண்டும். நாங்கள் அகிம்சை முறையில்தான் நடப்போம். அதுதான் எங்கள் போர்ராட்ட முறையும். ஆனால் இளைஞர்கள் எப்படி நடப்பார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். 1971ஆம் ஆண்டு ஏப்றில் மாதத்தில் நடந்த நிகழ்ச்சிகள் இளைஞர்களது கருத்தை நாம் மதித்துப் போற்றா விட்டால் அவர்களை நாம் அடக்க முடியாத நிலை வரும் என்பதைக் காட்டின.

## தேநீர் வேண்டாம் உரிமைதான் வேண்டும்

*(திரு. பீலிக்ஸ் ஆர். டி. பண்டாரநாயக்கா: நாம் தேநீர் குடிப்போம்.*

*பிரதிசபாநாயகர் அவர்கள்:*
*இன்று தேநீர் இடைவேளை இல்லை.)*

எங்களுக்குத் தேநீர் பெரிதன்று. எங்களுக்கு உரிமைதான் பெரிது. இளைஞர்களது எழுச்சி, வேதனை, வெறுப்பு ஆகியவற்றை நீங்கள் மதிக்கவேண்டும், அப்படி மதிக்கத் தவறினால் இந்த நாட்டு இளைஞர்களை அடக்கமுடியாத ஒரு சூழ்நிலை உண்டாகுமென்று மீண்டும் குறிப்பிட விரும்புகின்றேன்.

எந்த நாட்டில் அந்த நாட்டின் இரண்டாவது பெரிய இனத்தின் பிரதிநிதிகளை ஒதுக்கி ஆட்சி நடைபெறுகின்றது?

இப்பொழுது இடையில் ஒரு விடயத்தைச் சொல்ல விரும்புகின்றேன். புதிய அரசியல் அமைப்பு மக்களுக்கு இறைமை கொடுக்கின்றது என்று சொல்கிறார்கள். இந்த நாட்டை இனி மக்கள் ஆளலாம் என்று அரசியல் அமைப்பு அமைச்சரும்கூட அண்மையில் பேசி இருக்கிறார். இன்று நாட்டு மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு தமிழரோ முசிலிமோ சிறுபான்மை மக்களின் பிரதிநிதியாக அமைச்சரவையில் இருக்கவில்லை. தமிழ் பேசும் மக்களின் இறைமை முழுவதையும் இந்த அரசாங்கம் ஒதுக்கி விட்டது. பிரித்தானியர்கள் தமது ஆட்சிக்காலத்தில் தாங்கள் விரும்பிய ஒருவரை நியமித்துவிட்டு மக்களுக்கு இவர்தான் உங்கள் அதிகாரி என்று கூறினார்கள். இதுபோலத்தான் இவர்களும் நடந்திருக்கிறார்கள். ஏறக்குறைய முப்பத்தைந்து இலட்சம் தமிழ்–முசிலிம் மக்களுடைய இறைமை குழிதோண்டிப் புதைக்கப்பட்டிருக்கின்றது. இதை மறுக்கமுடியுமா? இப்படிச் செய்துவிட்டு நாங்களும் தமிழ் மக்களும் ஒன்றுபட்டு இருக்கிறோம் என உலகத்துக்குக் கூறமுடியாது. ஆகவே, நான் கேட்கிறேன் எந்த நாட்டில் அந்த நாட்டின் இரண்டாவது பெரிய இனத்தை ஒதுக்கி வைத்துவிட்டு ஆட்சி நடைபெறுகின்றது?''

## அரசியலமைப்பு தமிழரின் அடிமைச் சாசனம்

எந்த நாட்டில் அந்த நாட்டின் இரண்டாவது பெரிய இனத்தின் ஒத்துழைப்பு இன்றி—உடன்பாடு இன்றி—அரசியல் அமைப்புச் சட்டம் உண்டாக்கப்பட்டிருக்கின்றது?

எந்த நாட்டில் அந்நாட்டுக்கு உழைத்துக் குடியுரிமை வாக்குரிமை பெற்றிருந்த மக்கள் இன்று அவை பறிக்கப்பட்டு நாடற்றவர்களாக இருக்கின்றார்கள்?

எந்த நாட்டிலே அந்நாட்டு மக்களின் குடியுரிமையைப் பறிக்க அரசியல் அமைப்பு வழிவகுக்கின்றது?

எந்தச் சமதர்ம நாட்டிலே ஒரு மதம் மட்டும் அரசாங்க மதமாக ஆக்கப்பட்டிருக்கிறது?

இப்படி எல்லாம் செய்த பெருமை இந்த இலங்கையின் புதிய அரசியலமைப்புக்குரியது. எனவேதான் இந்த அரசியல் அமைப்பைத் தமிழர்களின் அடிமைச்சாசனம் என்கிறோம்; இந்த அரசியல் அமைப்புப் பௌத்த சிங்கள ஏகாதிபத்தியத்தை உருவாக்குகிறது என்று சொல்லுகிறோம்.

## வியட்நாம் - கொரியா - அயர்லாந்து ஆகலாம்

இந்த அரசியலமைப்பை எதிர்ப்பதற்குத் தமிழர்கள் எல்லோரும் கூட்டணி ஒன்றை அமைத்து ஒன்றுபட்டுவிட்டோம். நான் முன்னர்க்கூறியதுபோல நாங்கள் வாய் வீரம் பேசவில்லை; உங்களுக்கு எச்சரிக்கை செய்யவில்லை. நாங்கள் தொடங்கும் போராட்டம் எங்களுடைய போராட்ட வரலாற்றிலேயே ஓர் இறுதிப் போராட்டமாக அமைந்தாலும் அமைந்து விடலாம். இந்தப் போராட்டத்தை நாங்கள் தொடங்குவதற்கு மூன்று மாத அவகாசம் தந்திருக்கிறோம். இந்த மூன்று மாதங்களிலே நீங்கள் எங்களுடைய உரிமையைத் தருவதற்கு நடவடிக்கை எடுக்காவிட்டால் இந்த இலங்கை ஒரு வியட்நாம் ஆகவோ, கொரியாவாகவோ, அயர்லாந்து போலவோ மாறவேண்டிய ஒரு சூழ்நிலை உண்டாவது மட்டுமல்லாமல் இரத்தம் ஓடுவதைக்கூடத் தடுக்கமுடியாத ஒரு நிலையும் உண்டாகலாம் என்பதைக் கூறி எனது உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

### பிரதம அமைச்சருக்கு ஒரு பகிரங்க வினா

# யார் பைத்தியகாரர்?

எண்: 18/77
வேலணை.
12–5–72

மாண்புமிகு
திருமதி சிறிமாவோ ஆர். டி. பண்டாரநாயக்கா அவர்கள்,
பிரதம அமைச்சர்,
கொழும்பு.
அன்புடையீர்!

ஒரே ஒரு பகிரங்க வினா!

1958 இல் ஆக்கப்பட்ட தமிழ்மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் பிரமாணங்களின்றி நடைமுறைப்படுத்த முடியாத சட்டம். இத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துதற்கு 14–1?–1960 இல் பிரதிநிதிகள் சபையில் சில பிரமாணங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. மாண்புமிகு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவும் பாராளுமன்ற உறுப்பினர் சிலரும் செய்த சூழ்வினையால் இப்பிரமர்ணங்கள் நிறைவேற்றப்படாமல் மீட்கப்பட்டன. 1966இல் முன்னைய அரசாங்கம் தமிழ்மொழிப் பிரமாணங்களைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றியது. இவற்றை எதிர்க் கட்சியிலிருந்த நீங்கள் தீவிரமாக எதிர்த்தீர்கள்.

இந்தப் பிரமாணங்களை நடைமுறைப்படுத்தமாட்டோம் என்று 1971 இல் பாராளுமன்றத்தில் இரண்டு முறை மாண்புமிகு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா கூறினார். அரசாங்கத்துக்குத் தமிழில் எழுதப்படும் கடிதங்களுக்குத் தமிழில் மறுமொழி பெறும் உரிமையை இப்பிரமாணங்கள் கொடுக்கின்றன என நான் பாராளுமன்றத்

தில் வற்புறுத்தி வாதாடியபொழுது மாண்புமிகு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா இந்த விடயத்தை நீதிமன்றத் தூக்குக் கொண்டு செல்லுமாறு கூறினர்.

உங்கள் அரசாங்கம் தமிழ்ப் பகுதிகளில் தமிழைப் புறக் கணித்துச் சிங்களத்தைத் திணிக்கிறது. தமிழ் தெரியாத உத்தியோகத்தர்களைத் தமிழ்ப் பகுதிக்கு அனுப்புகிறது. தமிழ்ப் பகுதிகளில் உள்ள பொலிசு நிலையங்களில் சிங்களத்தில் வாக்குமூலங்களைப் பதிந்து கையெழுத்திடுமாறு தமிழ் மக்களை நெருக்குகின்றது. 1958 தொடக்கம் இன்றுவரை தமிழ்மொழிச் சட்டத்தை நடைமுறைப்படுத்த நீங்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. நாங்கள் பலமுறை இடித்து இடித்துக் கேட்டும் நீங்கள் ஒன்றும் செய்யவில்லை.

இச்சூழ்நிலையில் புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தில் தமிழ்மொழிச் சட்டத்தையும் தமிழ்மொழிப் பிரமாணங்களையும் சேர்ப்பதால் தமிழ் மக்களுக்கு மொழி உரிமை கிடைத்துவிடும் என்று கூறுகிறவர்கள் பைத்தியகாரர்களா? நம்புகிறவர்கள் பைத்தியகாரர்களா? உள்ளத்தைத் தொட்டு உண்மையைக் கூறுங்கள். நன்றி.

அன்பன்,
கா. பொ. இரத்தினம்,
பா. உ.

பிரதிகள்:

1. மாண்புமிகு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா அவர்கள்,
2. மாண்புமிகு செ. குமாரசூரியர் அவர்கள்.
3. மாண்புமிகு பதியுதின் மாமூத் அவர்கள்.
4. மாண்புமிகு கொல்வின் ஆர். டி. சில்வா அவர்கள்.

# மனப்பால் குடிக்கிறீர்களா?

வேலணை,
26–1–72

அரசாங்க நிருவாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் நீதி அமைச்சர்
மாண்புமிகு **பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா**
அவர்களுக்கு ஊர்காவற்றுறைப் பாராளுமன்ற உறுப்பினர்
**கா. பொ. இரத்தினம்** விடுக்கும் திறந்த முடங்கல்:

அன்புடையீர்,

நீங்கள் அண்மையில் யாழ் நகருக்கு வருகை தந்த பொழுது 15–1–72 இல் நகரமண்டபத்தில் ''அரைமணி நேரம் தமிழில் பேசி அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினீர்கள்'' என 16–1–72 ஆம் திகதி வெளியான ''ஈழநாட்டிதழ் கூறுகின்றது. 17–1–72 ஆம் திகதி வெளியான ஈழநாட்டு இதழில் நீங்கள் கூறியதாகப் பின்வரும் செய்தியும் காணப்படுகின்றது: ''சிங்கள–தமிழ் மக்களது ஒற்றுமையைப் பலப்படுத்த நான் விரைவில் தமிழ் படித்துச் சித்தியெய்துவேன். ஒரு தாய் பிள்ளைகளான தமிழ் சிங்கள மக்கள் ஒருவரது கருத்தை மற்றவர் அறியமுடியாமல் திண்டாடுவது மிகவும் கவலைக்குரியதாகும். எனவே நான் தமிழ் படிப்பதுபோல் தமிழ்ப் பெரியார்களும் சிங்களம் படிக்க முன்வரவேண்டும்''

நீங்கள் தமிழ் படித்து வருவதாகப் பிரதிநிதிகள் சபையிலும் இடையிடையே கூறினீர்கள். இப்பொழுது யாழ் நகரில் தமிழில் பேசி உங்கள் தமிழறிவின் தரத்தை மக்கள் அறியச் செய்திருக்கிறீர்கள். இப்பொழுது உங்களுக்குத் தமிழ் தெரியுமாகையால் நான் உங்களுக்கு எழுதும் தமிழ்க்

கடிதங்களுக்கு இனிமேலாகுதல் தமிழில் மறுமொழி அனுப்புவீர்கள் என்றெண்ணுகின்றேன்.

## மொழியுரிமைக் கிளர்ச்சிகளும் போராட்டங்களும்

''சிங்கள–தமிழ் மக்களது ஒற்றுமையைப் பலப்படுத்துவதற்குத்தான் நீங்கள் தமிழ் படிப்பதாகக் கூறியிருக்கிறீர்கள்''

சிங்கள–தமிழ் மக்களது ஒற்றுமையைப் பலப்படுத்த நீங்கள் முயல்வதாகக் கூறுவது மகிழ்ச்சிக்குரியது, நீங்கள் தமிழைப் படிப்பதால்மட்டும் இந்த ஒற்றுமையை உண்டாக்கமுடியாது என்பதை நீங்கள் இன்னும் உணரவில்லையா? தமிழ் மக்களின் உள்ளம் நிறைவு கொள்ளத்தக்க முறையில் தமிழ்மொழி உரிமைகளை உங்கள் அரசாங்கம் கொடுத்தாலன்றி இந்நாட்டில் சிங்கள–தமிழ் மக்களது ஒற்றுமையை உண்டாக்க முடியாது என்று தமிழ் மக்களின் பிரதிநிதிகள் 1956ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ந்து கூறிவருவதையும், தமிழ்மொழி உரிமைகளைப் பெறுவதற்குத் தமிழ் மக்கள் கிளர்ச்சிகளும் போராட்டங்களும் நடாத்தி வருவதையும் நீங்கள் அறியாதவர்களா? உண்மை நிலைமையை உணராமல் நீங்கள் பேசுகிறீர்களா? அன்றேல் தமிழ் மக்களை ஏமாற்றிவிடலாம் என்று இன்றும் எண்ணுகிறீர்களா?

உங்களின் தமிழ்ப் பேச்சை வானளாவப் புகழ்ந்த ஈழநாடு என்னும் பத்திரிகை – யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் ஒரே ஒரு நாளேடு - இலங்கைத் தமிழரால் நடாத்தப்படும் ஒரு நாளேடு – அரசாங்கத்தைப் பெரிதும் ஆதரிக்கும் ஏடு–எழுதிய ''சபாஸ் பீலிக்ஸ்'' (17–1–72)''தமிழரின் தன்மானம்'' (25–1–72) எனும் ஆசிரியருரைகள் இரண்டினையும் இதனுடன் இணைத்துள்ளேன். இப்பொழுது உங்களுக்குத் தமிழ் தெரியும்தானே! எனவே படித்துப்பாருங்கள்! தமிழ் மக்கள் தம்மொழி உரிமைகளைப் பெற எவ்வாறு துடிக்கிறார்கள் என்பதை அறிவீர்கள்.

இன்று 99·9 சதவீதமான தமிழர்கள்(·1 சதவீதம் பைத்திய காரருக்காகக் குறைக்கப்பட்டது) தமிழ் உரிமைகளைப் பெற விரும்புகிறுர்கள் என்பதை நான் பிரதிநிதிகள் சபையில் வரவு செலவுத் திட்ட விவாதத்தின்போது அழுத்தம் திருத் தமாக எடுத்துரைத்தேன். மறுக்க முடியுமா என்ற சவா லும் விட்டேன். மறுமொழியே கூருமல் நழுவி விட்டீர்கள்.

## வேலியே பயிரை மேய்கிறது!

இன்று நாட்டில் தமிழ் மக்களின் தாய்மொழிப் பற்றை மதித்து, அவர்களின் தமிழ்மொழி உரிமைகளைக் கொடுக் கத்தக்க முறையில் தமிழ்மொழிச் சட்டத்தை நடைமுறைப் படுத்த வேண்டிய அமைச்சராகிய நீங்கள் வேலியே பயிரை மேய்வதுபோலத் தமிழ்மொழிச் சட்டத்தைச் செல்லாக்கா சாக்கி, முன்னைய அரசாங்கம் கொடுத்த அரைகுறை உரி மைகளையும் பறித்துத் தமிழில் எழுதுவோருக்கு ஆங்கிலத் தில் மறுமொழி அனுப்புவேன் என்று ''அடம்'' பிடித்து, தமிழ் மக்களின் வெறுப்புக்கும் வேதனைக்கும் ஆளான முத லாவது எதிரியாக இருக்கிறீர்கள் என்பது உங்களுக்குத் தெரியாமலா சிங்கள—தமிழ் மக்களது ஒற்றுமை பற்றிப் பேசு கிறீர்கள்.

குடிகாரன் மதுவிலக்கைப்பற்றிப் பேசுவதும், ஓநாய் ஆட்டுக் குட்டியுடன் ஒற்றுமைப்படுதற்கு முயல்வதாகப் பேசுவதும் போன்றதே நீங்கள் சிங்கள — தமிழ் மக்களது ஒற்றுமையைப்பற்றிப் பேசுவது. கபடம் அறியாத குழந் தைக்கு இனிப்பைக் கொடுத்து அதன் கழுத்தை நெரித்துக் கொன்று தங்கச் சங்கிலியைத் திருடுதலைப் போன்றதே நீங்கள் தமிழ் படிக்கிறேன் என்று தமிழ் மக்களுக்குக் கூறிக் கொண்டு தமிழ் உரிமைகளைப் பறிப்பது.

## தமிழ்மக்கள் மரங்களா? மண்ணுங் கட்டிகளா?

இந்த அரசாங்கம் விரும்பினுல் இருபத்துநான்கு மணி நேரத்தில் தமிழ் மொழி உரிமைகளைக் கொடுக்கலாம் என்று நான் பிரதிநிதிகள் சபையிலே சுட்டிக்காட்டினேன். நீங்

கள் நினைத்தால் இதனைச் செய்யமுடியும். இதனைச் செய்யத்தக்க ஆற்றலும் அதிகாரமும் செல்வாக்கும் படைத்த ஒரே ஒரு அமைச்சர் நீங்களே. ஆனால் தமிழ்மொழி உரிமைகளைக் கொடுக்காமல் தடைபோட்டுக்கொண்டு இருப்பவரும் நீங்களே என்பதைத் தமிழ்மக்கள் மட்டுமன்றி இந்நாட்டுமக்கள் பலரும் நன்கறிவர். மொழிச் சட்டங்களை நடைமுறைப்படுத்துதற்குப் பொறுப்பாயிருக்கும் நீங்கள் இன்றுவரை தமிழ்மொழிச் சட்டத்தை அரை குறையாகத்தானும் நடைமுறைப்படுத்தச்செய்தற்கு யாதேனும் நடவடிக்கை எடுத்திருக்கிறீர்களா? உள்ளத்தைத் தொட்டுச் சொல்லுங்கள்! தமிழ்மொழி(விசேட ஏற்பாடுகள்) சட்டத்தைச் செல்லாக் காசாக்கிவிட்டு இந்தச் சட்டத்தை அரசியலமைப்பில் புகுத்தினல் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்வார்களா? தமிழ் மக்கள் எல்லோரும் மரங்களா? மண்ணுங்கட்டிகளா?

## பிறர்க்கிடு பள்ளம் தான் விழும் பள்ளம்

இன்று இலங்கையில் தமிழ் மொழி உரிமைகளை மறுப்பவர்களின் முதல்வர் நீங்களே என்பதையும்,

நீங்கள் நினைத்தால் இருபத்துநான்கு மணி நேரத்தில் தமிழ்மொழி உரிமைகளை கொடுக்கமுடியும் என்பதையும்,

'நான் தமிழ் படிக்கிறேன்' என்ற போர்வையில் உங்கள் ஆட்சியின் சூழ்ச்சிகளை மறைக்கமுடியாதென்பதையும்,

தமிழர்கள் அரசியலமைப்புச் சட்டத்தை எதிர்ப்பதற்கும் தமிழ்மொழி உரிமைப் போராட்டத்தை மீண்டும் தொடங்குதற்கும் பெரிதுங் காரணமாயிருப்பவர் நீங்களே என்பதையும் நாடறியச் சொல்லி வைக்கவே இத்திறந்த முடங்கலை உங்களுக்கு விடுக்கின்றேன்,

தமிழ் மொழி உரிமைகளைக் கொடுக்காமல் தமிழினத்தின் பகைவராக ஆகுவதால் — தமிழர்களின் தொண்டைக்குள் சிங்களத்தைப் புகுத்தி அவர்களை மெல்ல மெல்லச் சிங்களவர்களாக்க முயல்வதால்—தமிழர்களை அடக்கி அடிமைப்படுத்துவதால் இந்நாட்டின் ஆட்சியில் மேலும் அதிகாரத்தைப் பெறலாம் — பிரதம அமைச்சராகலாம் என மனப்பால் குடிக்கிறீர்களா?

''மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறம்சூழும் சூழ்ந்தவன் கேடு''

எனும் பொய்யா மொழியைமட்டும் உங்களுக்கு இப்பொழுது நினைவூட்டி நிறுத்துகின்றேன், பிற பின். நன்றி.

அன்பன்,
கா. பொ. இரத்தினம்.
பா. உ.

பிரதி: மாண்பு மிகு திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா,
பிரதம அமைச்சர்.

ஆனந்தா அச்சகம், யாழ்ப்பாணம்.

மனப்பால் முதற் பதிப்பு: ஆவணி 1972. விலை சதம் 60

இந்த உரையைப்பற்றி —

> ''தாயின் கையையும் காலையும் கட்டி முகத்தை மூடி தூக்குமேடைக்கு இழுத்துச் செல்லும்போது, மக்கள் தங்கள் தாயைக் காக்க வேண்டாமா? தாயான தமிழ் மொழியின் கைகளும் கால்களும் கட்டப்பட்டு, முகம் மூடப்பட்டு கழுத்தில் தூக்குக்கயிறு மாட்டப்பட்டுள்ள போது 'எங்கள் தாயைக் கொல்லாதீர்கள்' என்று கேட்பது தவறு? — என்று ஊர்காவற்றுறைப் பிரதிநிதி உணர்ச்சியுடனே தேசிய அரசுப் பேரவையில் பேசிய பேச்சு அமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவின் உள்ளத்தைத் தொட்டதாம். பண்டிதர் இரத்தினம் அவர்கள் பேசியது அவரது உள்ளத்தில் இருந்து பிறந்தவை என்று அமைச்சர் பீலிக்ஸ் தம்மிடம் தனியாகக் கூறியதாக பேரவையில் தபால் அமைச்சர் குமாரசூரியர் அவர்கள் தெரிவித்தார்''
>
> — ஈழநாடு 9-7-72

---

**கா. பொ. இரத்தினம்** பா. உ. எழுதிய இன எழுச்சி நூல்கள்;

★ **அடிமைச் சாசனம்:**
(புதுக்கிய இரண்டாம் பதிப்பு விரைவில் வெளிவரும்)

வெளிவர உள்ளவை:

★ **தனி ஆட்சி** (அச்சில்)
(அரசியலமைப்புச் சபையில் நிகழ்த்திய உரைகள்)

★ **''வெல்லுவோம்''**
(ஈழத் தமிழினம் வெல்ல முடியும் என்பதை நிறுவுவது)

★ **ஈழத்தமிழர் போராட்டம்:**
(விசயனுக்கு முற்பட்ட கால[illegible] தொடக்கம் இன்றுவரை)

---

பிரதான விற்பனையாளர்கள்:

- க. அம்பிகாபதி, வேலணை.
- தமிழ்ப்பண்ணை, யாழ்ப்பாணம்.
- ஆனந்தபவான், கொழும்பு.
- ரகுநாதன் பதிப்பகம், கொழும்பு - யாழ்ப்பாணம்.
- சக்தி நூல்நிலையம், மட்டக்களப்பு.
- வாணி புத்தகசாலை, திருக்கோணமலை.